DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 351/2024

Miscellaneous :

Sessions : PW –7

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | நந்தகுமார் |
| Father / Husband Name | ராமலிங்கம் |
| Village | சித்தாமூர் |
| Taluk | செய்யூர் தாலுக்கா |
| Age | 61 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07. 07.2026

**முதல் விசாரணை:**

1. நான் கடந்த 2025 ம் ஆண்டு ஒரத்தி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பிப்ரவரி 2025 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று நான் தற்போது சித்தாமூரில் வசித்து வருகிறேன். கடந்த 17.05.2024 ம் தேதி காலை 10.30 நான் நிலைய பொறுப்பில் இருந்த போது 16.05.2024 ம் தேதி ஏழுமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனு ரசீது எண்.214/2024 என்ற வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அந்த புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.75/2024 இதச பிரிவுகள் 294 பி, 323, 324, 506(2) மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வாசுதேவன் மற்றும் முத்துலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் அன்றைய தினம் 11.00 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 3 அடி நீளமுள்ள சவுக்கு கட்டை ஒன்றை கைபற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தேன் **(அந்த கைபற்றுதல் மகசர் அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 17.05.2024 ம் தேதி காலை 11.30 மணிக்கு கழனியில் நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 உடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த படிவம் 91 அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (அந்த 3 அடி நீளமுள்ள சவுக்கு கட்டை அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வினோத்குமார் என்பவரை விசாரித்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294பி, 323, 324, 506(2) மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

5. சம்பவம் தொடர்பாக ஏழுமலை எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 15ம் தேதி சுமார் 05.00 மணியளவில் வந்து என் மனைவி சாந்தி என்பவரை செல்வராஜ் தகாத முறையில் திட்டினார் என்று கூறினார். அதனடிப்படையில் எதிரியை தொடர்பு கொண்டு கேட்டதில் அவர் மறுநாள் காவல் நிலையம் வருவதாக சொன்னார். அதன் பிறகு வீட்டிற்கு சென்ற சாந்தி என்பவர் அவரது கழனியில் இருந்த தண்ணீர் பைப்புகளை எடுத்து வைக்க சென்ற போது, என் மீதே புகார் கொடுத்துள்ளாயா என்று எதிரி செல்வராஜ் சாந்தியை தகாத வார்த்தைகளில் திட்டி அருகே கிடந்த கட்டையை எடுத்து அடித்ததாக சாந்தியும் அவரது கணவர் மற்றும் மகனும் வந்து சொன்னார்கள். நான் அவர்களை முதலில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொள்ள சொன்னேன். அவர்கள் ஒரத்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முதலுதவி சிகிச்சைக்கு சென்றார்கள். அங்கிருந்து மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்குசென்றார்கள்.

6. அதன் பின்னர் 16ம் தேதி வந்து புகார் கொடுத்தார். என்னிடம் காட்டபடும் புகாரில் புகாரை நான் 17ம் தேதி பெற்று CSR எண்.214/2024 பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். 15ம் தேதி அளித்ததற்கு எனக்கு 16ம் தேதி தான் புகார் வந்தது. என்னிடம் காட்டபடும் அசாபொ.1 சவுக்கு கட்டையா என்றால் இல்லை தைலமரக்கட்டை. குற்றமுறையீட்டாளர் என்ன கட்டையால் அடித்தார் என்று தெரியாமல் சவுக்கு கட்டையால் அடித்துவிட்டதாக கூறிவிட்டார். நான் சம்பவ இடம் சென்று இந்த கட்டையை கைபற்றினேன். ஆஜர் எதிரியும் புகார் தாரரும் உறவினர்கள் என்றால் சரிதான். இருதரப்பினரும் பக்கத்து பக்கத்து கழனிகாரர்கள் என்றால் சரிதான்.

7. அவர்களின் கழனிக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் அடிக்கடி தகராறு வரும் என்றால் எனக்கு தெரியவில்லை. புகாரில் நேற்று மாலை சாந்தி என்பவர் புகார் கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரை என்ன செய்தேன் என்றால் அதன் பேரில் CSR வழங்கினேன். அந்த புகாரில் இருதரப்பினரையும் விசாரித்தேனா என்றால் போன் செய்து கூப்பிட்டேன் அவர் மறுநாள் வருவதாக சொன்னார். அதனால் அன்றையதினம் விசாரிக்கவில்லை. இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் புகார்தாரருக்கு மட்டுமல்ல எதிரிக்கும் உறவினர்கள் தான். சாந்தி ஒரத்தி மருத்துவமனையில் இருந்து மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றார் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனா என்றால் இல்லை.

8. சாந்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக தான் சிகிச்சை எடுத்து கொண்டார். சாந்தி எந்த தேதியில் டிஸ்சார்ஜ் ஆனார் என்று எனக்கு தெரியவில்லை. வழக்கில் ஆஜர் செய்யப்பட்டுள்ள அசாபொ.1 புகாரில் குறிப்பிடபட்ட பொருள் இல்லை

என்றாலும் நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் காவல் நிலையத்திலேயே வைத்து ஆவணங்களை தயார் செய்து புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாந்தி அளித்த புகாரின் மீது CSR எண்.214/2024 பதிவு செய்து இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கு சம்பவத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.